Crl.Misc.36
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code off Criminal Procedure)
-----

IN THE COURT OF THE SESSIONS JUDGE, DISTRICT COURT NO.II, KANCHIPURAM.

| | |
|---|---|
| Sessions Case No. | : SC.No. 135/2014 |
| Primary Register Case No. | : |
| | : Prosecution: K.Sampath |
| Deposition of Witness for | : அ.சா.6 |
| Name | : திரு. ஆறுமுகம் |
| Fathers Name | : த/பெ. செங்கமலம் |
| Age | : |
| Religion | : |
| Calling | : |
| Address | : |
| Phone / Mobile No. | : |

Solemnly affirmed in accsordance with the provision of Act X of 1873 of the day of 2019
நாள்–10.02.2020. (Monday)

**<u>முதல் விசாரணை–</u>**

நான் கருங்குழி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.5ஐ எனக்கு தெரியும். அவர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது நான் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். 2012ஆம் ஆண்டில் களியம்பேட்டை கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். கடந்த 2013ஆம் ஆண்டில் ஒரு நாள் பகல் 12 மணியளவில் அ.சா.5 என்னை அழைத்தார். அதன் பேரில் நாங்கள் இருவரும் களியம்பேட்டை ஆற்றுப்படுகையில் உள்ள சுடுகாட்டு பகுதிக்கு சென்றோம். அங்கு சென்று அ.சா.5 அந்த ஊர்காரர் சிலரிடம் பேசி கொண்டிருந்தர். நான் சற்று தள்ளி நின்று கொண்டிருந்தேன். பின்னர் சாலவாக்கம் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்று கூறி என்னை அ.சா.5 அழைத்து கொண்டு சென்றார். அங்கு காவல்நிலையத்தில் எழுதி வைத்திருந்த மகசரில் அ.சா.5 முதலாவதாகவும், நான் 2வதாகவும் கையெழுத்துகள் போட்டோம். லாரியை பிடிக்க முயற்சி செய்ததாகவ், பிடிக்க வந்தவர்களை மடக்கி தள்ளிவிட்டு சென்றதாகவும் அந்த மகசரில் எழுதப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வதாக உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேடேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எந்த விவரமும் தெரியாது. ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு அப்போது தெரியாது. ஏனென்றால் நான் அப்போது தான்

நான் அங்கு வேலைக்கு சேர்ந்திருந்தேன். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு அது பரிசீலனைக்கு பின்னர் ஏற்கப்பட்டு சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 17.09.2013 அன்று களியம்பேட்டை பாலாற்று படுகையில் மணல் திருடியதாக ட்டி.என்-21- ஏஏ-6134 என்ற லாரியை சாலவாக்கம் போலீசார் பிடித்து வைத்திருப்பதாக அ.சா5சாட்சியிடம் தகவல் சொன்னதன் பேரில் நானும் எனது கிராம நிர்வாக அலுவலரும் அன்று காலை சுமார் 11.30 மணியளவில் களியம்பேட்டை சுடுக்காட்டுக்கு சென்றேன் என்றும், எங்கள் முன்னிலையில் சாலவாக்கம் காவல் ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், மேற்படி பார்வை மகசரில் மேற்படி இடத்தில் வைத்து நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பங்கள் இட்டோம் என்றும், 2ஆம் எதிரி ராஜன் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதிலும் நானும் அ.சா.5ம் சாட்சிகளாக கையொப்பங்கள் இட்டோம் என்றும், அன்றே ட்டி.என்-21- ஏஏ-6134 என்ற லாரியை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், ஆய்வாளர் விசாரணையின் போது கூறியிருக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. எங்கள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சம்பவ இடத்தில் வைத்துதான் நாங்கள் கையெழுத்துகள் போட்டோம் என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

<u>1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

தனக்கு குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்படி எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

Crl.Misc.36
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code off Criminal Procedure)
-----
IN THE COURT OF THE SESSIONS JUDGE, DISTRICT COURT NO.II, KANCHIPURAM.

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | SC.No. 135/2014 |
| Primary Register Case No. | : | |
| | : | Prosecution: K.Sampath |
| Deposition of Witness for | : | அ.சா.5 |
| Name | : | திரு. கெங்கன் |
| Fathers Name | : | த/பெ. முனுசாமி |
| Age | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Address | : | |
| Phone / Mobile No. | : | |

Solemnly affirmed in accsordance with the provision of Act X of 1873 of the day of 2019
நாள்—10.02.2020. (Monday)

**முதல் விசாரணை—**

நான் காவித்தண்டலம் கிராம் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் களியம்பேட்டை கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். அப்போது எனது கிராம உதவியாளராக திரு.ஆறுமுகம் பணிபுரிந்து வந்தார். 2013ஆம் ஆண்டில் களியம்பேட்டை கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்த போது சாலவாக்கம் காவல் துறையினர் காலை சுமார் 10.30 மணியளவில் ஒரு நாள் எனக்கு போன் செய்தார்கள். மணல் வண்டி பிடித்து வைத்திருப்பதாகவும், அதை வந்து பார்க்குமாறும் என்னிடம் தகவல் தெரிவித்தார்கள். நான் உடனே மணல் பிடித்து வைத்திருந்த களியம்பேட்டை பாலாற்று படுகையில் உள்ள சுடுகாட்டு பகுகதிக்கு சென்றேன். போய் பார்த்தவுடன் வருவாய் துறையில் மகசர் எழுதி கொடுக்க சொன்னார்கள். நான் அதற்காக மகசர் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் வேறு எதுவும் பண்ணவில்லை. ஆஜர் எதிரிகளை அவர்கள் களியம்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எனக்கு தெரியும். நான் மேற்படி பாலாற்று படுகைக்கு சென்ற அன்று எதிரிகளை நான் அங்கு பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்படி ஆவணங்களில் எழுதப்பட்ட விவரங்கள் சாலவாக்கம் காவல் நிலையத்தில் வைத்து

எழுதப்பட்டது. மேற்படி ஆவணங்களில் 2வதாக உள்ள கையொப்பங்கள் எங்கள் கிராம உதவியாளர் ஆறுமுகம் என்பவரின் கையொப்பங்கள் ஆகும். மேற்படி என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் முதலாவதாக உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2. இந்த வழக்கு சம்பந்தமக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு அது பரிசீலனைக்கு பின்னர் ஏற்கப்பட்டு சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 17.09.2013 அன்று களியம்பேட்டை பாலாற்று படுகையில் மணல் திருடியதாக ட்டி.என்-21- ஏஏ-6134 என்ற லாரியை சாலவாக்கம் போலீசார் பிடித்து வைத்திருப்பதாக என்னிடம் தகவல் சொன்னதன் பேரில் நானும் எனது கிராம நிர்வாக உதவியாளரும் அன்று காலை சுமார் 11.30 மணியளவில் களியம்பேட்டை சுடுக்காட்டுக்கு சென்றேன் என்றும், எங்கள் முன்னிலையில் சாலவாக்கம் காவல் ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், மேற்படி பார்வை மகசரில் மேற்படி இடத்தில் வைத்து நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பங்கள் இட்டோம் என்றும், 2ஆம் எதிரி ராஜன் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதிலும் நானும் திரு.ஆறுமுகமும் சாட்சிகளாக கையொப்பங்கள் இட்டோம் என்றும், அன்றே ட்டி.என்-21- ஏஏ-6134 என்ற லாரியை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், ஆய்வாளர் விசாரணையின் போது கூறியிருக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. எங்கள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சம்பவ இடத்தில் வைத்துதான் நாங்கள் கையெழுத்துகள் போட்டோம் என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

**1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—**

தனக்கு குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்படி எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

**நீதிமன்ற கேள்வி—**

கேள்வி— நீங்கள் ஒரு அரசு ஊழியரா? இல்லையா?

பதில்— நான் அரசு ஊழியர் தான்.

கேள்வி— உங்களுடைய பணி அரசு சொத்துக்களை பாதுகாப்பதா? இல்லையா?

பதில்— அரசு சொத்துக்களை பாதுகாப்பதுதான் எனது பணி.

கேள்வி— ஒரு அரசு ஊழியராக இருந்து கொண்டு அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கலாமா?

பதில்— அளிக்கக்கூடாது.

கேள்வி— அவ்வாறு அரசுக்கு எதிராக சாட்சியம் அளிப்பது சட்டப்படி குற்றமா? இல்லையா?

பதில்— குற்றம்தான்.

கேள்வி— அவ்வாறு ஒரு அரசு ஊழியர் குற்றம் செய்தால் அவர் அந்த பணியில் இருக்கும் தகுதி உடையவராக கருதப்படுவாரா?

பதில்— தகுதி உடையவராக இருக்காது.

கேள்வி— பொதுவாக நீங்கள் எழுதப்பட்ட தாளில் கையெழுத்து போடுவதற்கு முன்பு படித்து பார்த்துவிட்டு கையெழுத்து போடுவீர்களா? அல்லது படிக்காமல் கையெழுத்து போடுவீர்களா?

பதில்— படித்து பார்த்துவிட்டு தான் நான் கையெழுத்து போடுவேன்.

கேள்வி— எழுதாத விடை தாளில் அரசு ஊழியராக நீங்கள் இருக்கும் போது கையெழுத்து போட்டு இருக்கிறீர்களா?

பதில்— நான் போட்டதில்லை.